**தலைப்பு 259 - மாவட்ட செயலகம், மாத்தளை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

**1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்**

---

(அ) பிரதேச நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளை செயற்படுத்தல்

(ஆ) பிரதேச செயலகங்களிற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்கி சிறந்த நிதி முகாமைத்துவத்தை பேணிச் செல்லல்

(இ) பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொள்வனவு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் செயன்முன்னேற்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஈ) மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களினதும் மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

(உ) மாவட்டத்திலுள்ள மக்களின் சீவனோபாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் அவற்றின் செயன்முன்னேற்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

(ஊ) மாவட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக மூலதன முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட சகல நிர்மாண நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்தல்.

(எ) மாவட்ட விவசாய நடவடிக்கைகளையும் சுற்றாடல் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஏ) மாவட்டத்தில் ஆண்மீக அபிவிருத்தியையும் இனங்களுக்கிடையே நல்லுறவையும் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்தல்.

(ஐ) காணிப் பிரச்சினைகள் தொடர்பான ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஒ) சுடு கலன் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வெடி பொருட்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் நடவடிக்கைகள்.

(ஓ) மாவட்ட தகவல்களை வழங்குதல்.

(ஔ) மாவட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்**

---

| | | | |
|---|---|---|---|
| (அ) | பல்லேபொல | (எ) | நாவுல |
| (ஆ) | கலேவல | (ஏ) | உக்குவெல |
| (இ) | தம்புள்ள | (ஐ) | யட்டவத்த |
| (ஈ) | அம்பன்கங்க கோரளை | (ஒ) | வில்கமுவ |
| (உ) | ரத்தொட்ட | (ஓ) | லக்கல – பல்லேகம |
| (ஊ) | மாத்தளை | | |

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு

உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) ஒதுக்கீட்டுக்கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 487,075,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 482,822,573 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 4,252,427 ஆக அல்லது 0.9 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 436,825,000 | 435,057,769 | 1,767,231 | 0.4 |
| மூலதனம் | 50,250,000 | 47,764,804 | 2,485,196 | 4.9 |
| **மொத்தம்** | **487,075,000** | **482,822,573** | **4,252,427** | 0.9 |

(ii) **பாதீட்டு முரண்**

-----------------------------

06 மீண்டெழும் செலவின விடயங்களிற்காகவும் 03 மூலதன செலவின விடயங்களிற்காகவும் மிகை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாட்டில் 07 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையான வீச்சில் அமைந்திருந்தது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பல்வேறு செயற்பாடுகளுக்காக 24 அமைச்சுக்களிடமிருந்தும் 19 திணைக்களங் களிடமிருந்தும் ரூபா 1,947,816,335 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்ததுடன் இந்த நிதி ஏற்பாட்டில் முறையே ரூபா 914,851,351 மற்றும் ரூபா 839,715,869 ஆக ரூபா 1,754,567,220 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 173,903,581 மற்றும் ரூபா 19,345,534 என்ற வகையில் ரூபா 193,249,115 கூட்டுத்தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு கிடைத்திருந்த நிதியேற்பாட்டில் முறையே 16 சதவீதத்திற்கும் 02 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்டிருந்த ரூபா 730,212,240 ஏற்பாட்டிலிருந்து ரூபா 586,164,568 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 144,047,672 அல்லது 20 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2013 மார்ச் 28 ஆந் திகதிய 1/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி வறுமை ஒழிப்பு நோக்கத்திற்கு முக்கியத்துவமளித்து குறித்த செயற்திட்டங்களிற்காக நலனாளிகள் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், அந்த நோக்கத்திற்கு முரணாக செயற்பட்டு மாத்தளை பிரதேச செயலகத்தினால் ரூபா 95,000 செலவிட்டு மாத்தளை கிரிஸ்துதேவ தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திற்கு 10 ஹொக்கி மட்டைகளும் 02 ஹொக்கி பந்துகளும் வழங்கப்பட்டிருந்தன.

- 35 பெரிய வெங்காய களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,500,000 செலவில் நாஉல பிரதேச செயலகத்தினால் தெரிவுசெய்யப்பட்டிருந்த 35 விவசாயிகளில் 6 விவசாயிகள் களஞ்சியங்களை நிர்மாணித்திருக்கவில்லை. இருப்பினும், அதற்குப் பதிலாக வேறு 6 விவசாயிகளை இனங்கண்டு அந்த ஏற்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ரத்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக இனங்காணப்பட்டிருந்த 67 முழுமையான சேதங்களுக்கும் 177 பகுதியளவான சேதங்களிற்கும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் ரூபா 17,915,000 ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நலனாளிகளை இனங்காணல் மற்றும் ஏற்பாடுகளை வரவழைத்தல் என்பன பொருத்தமான ஆய்வொன்றின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் தேவைக்கு மேலதிகமாக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,307,600 ஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- ‘‘கிரி வீதுறுவ’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 13 முன் பள்ளிகளுக்காக ரூபா 414,930 ஆன ஏற்பாடு அம்பன்கங்ககோரளை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 07 முன் பள்ளிகளுக்கு மாத்திரம் இந் நிகழ்ச்சித்திட்டம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 145,470 ஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 25901 | 25,000,000 | 24,944,419 | 24,000,000 | 27,203,041 | 150,000,000 | 110,623,971 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணக் கணக்குகள் மீதான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியிலுள்ளவாறு அறவிடுதல் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 671,905 ஆகும்.

(ii) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2013 சனவரி 31 ஆந் திகதிய 157(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணக்கமின்றி மாத்தளை மாவட்டச் செயலகத்தினால் மூன்று உத்தியோகத்தர்களிற்கு உரிய எல்லைகளை மீறி ரூபா 282,034 இடர் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

**(இ) பொது வைப்புக்கள் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாத்தளை மாவட்டச் செயலகத்தின் 6003/0000/00/035/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 120,233,213 மொத்தமாக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 ஆண்டுகளிற்கும் மேலாக காணப்பட்ட ரூபா 452,904 கூட்டுத்தொகையான 08 வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரண்டு அமைச்சுக்கள், ஒரு திணைக்களம் மற்றும் 03 பிரதேச செயலகங்களிலிருந்து பல்வேறு நோக்கங்களிற்காகவும் வழங்கப்பட்டிருந்த ரூபா 460,000 தொகை தொடர்புடைய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பல்லேபொல பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க இல்லம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 05 ஆண்டுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்கள்**

மாத்தளை மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்கள் ரூபா 2,099,315 மொத்தமாக காணப்பட்டது. அந்த மீதிகள் யாவும் ஒரு ஆண்டிற்கும் குறைவான காலப்பகுதிக்குரியனவாகும்.

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | - | 02 பிரதேச செயலகங்களில் வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த 03 விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) ஓய்வூதிய சுற்றறிக்கை** | | |
| 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய 13/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பின்னிணைப் பிலுள்ள 04 ஆம் பந்தி | 4,500 | 2013 மார்ச் 30 ஆந் திகதியளவில் 26 வயது பூர்த்தியான அநாதை ஒருவருக்கு அதனைக் கருத்திற்கொள்ளாது உகுவல பிரதேச செயலகத்தினால் 2014 பெப்ரவரி மாதம் வரை அநாதை ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. |

**1.8 செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள நலிவுகள்**

செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்**

யட்டவத்த பிரதேச செயலகத்தினால் 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி ரூபா 993,630 மதிப்பீட்டு கிரயத்தின் கீழ் யட்டவத்த – மாத்தளை வடக்கில் குளாய்க் கிணறு ஒன்றையும் நீர் தாங்கி ஒன்றையும் நிர்மாணித்தல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக ரூபா 569,480 செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளிற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 430,520 ஏற்பாடு கிடைத்திருந்த போதிலும், காரியத்துடன் கூடிய மணல் குளாய்க் கிணற்றில் குவிகின்றமையால் ஏற்பாட்டை பயன்படுத்தாது செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | 2013 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு | ஆரம்பித்த திகதி | பூரணப்படுத்த வேண்டிய திகதி | பூரணப்படுத்திய திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா | |
| (i) தம்புள்ள வெள்ள அனர்த்த குறைப்புச் செயற்திட்டம் | 20,200,000 | 2013.11.04 | 2013.12.31 | 2014.01.30 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்படவில்லை. | 4,639,034 | மதிப்பிட்டைத் தயாரிப்பதிலும் கொள்வனவு நடைமுறைகளை செயற்படுத்துவதிலும் தாமதம் |
| (ii) சிறிய ரத்தொட்ட நிலச்சரிவு குறைப்புச் செயற்திட்டம் | 10,000,000 | 2013.07.31 | 2013.12.31 | 2014.01.30 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்படவில்லை. | 2,327,489 | மூல மதிப்பிட்டைத் திருத்துவதற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை கோருவதற்கு ஏற்பட்டிருந்தமை |

**1.9 செயலாற்றல்**

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மாவட்டச் செயலகத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் அடையப்படாத பிரதான செயற்பாடுகள்**

மாத்தளை மாவட்டச் செயலக வளவில் புதிய நிர்வாகத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் இரண்டாம் கட்டத்திற்காக 2013 இன் வருமாந்த பாதீட்டு மதிப்பீட்டினால் ரூபா 9,000,000 ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்திட்ட அறிக்கை கொள்வனவுகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படுதல் தாமதமடைந்திருந்தமை காரணமாக 2013 ஆம் ஆண்டில் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடுதல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்பட்டிருக்காமை**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க பின்வரும் சந்தர்ப்பங்களில் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 10,350,000 மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட நிர்மாணித்தல் மற்றும் திருத்தங்கள் தொடர்பான 10 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 3,095,155 கிரயம் கொண்ட கட்டிட திருத்தங்களுடன் தொடர்புடைய 13 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**1.10 நட்டங்களும் சேதங்களும்**

மாவட்டச் செயலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள திறன் விருத்தி பிரிவிக்கு உரித்தான ரூபா 87,994 பெறுமதியுடைய கனணியொன்று 2013 ஏப்ரல் மாதத்தில் காணாமல் போயிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 07 பிரதேச செயலகங்களினால் காணிகளை கையேற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 01 முதல் 38 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதிலும்,

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியின் சேவைக்காக லக்கல பல்லேகம பிரதேச செயலகத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் ஆகிய இரண்டு மாதங்களிற்காக உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 48,955 சம்பளமும் படிகளும் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தினதும் 11 பிரதேச செயலகங்களினதும் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 53 | 45 | 08 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 20 | 15 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 907 | 654 | 253 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 116 | 109 | 07 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 1,111 | 832 | 283 | 04 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய வெற்றிடங்களிலிருந்து 83 வெற்றிடங்களை நிரப்பவதற்கு 2014 ஒக்தோபர் வரை முடியாமல் போயிருந்தது.

(ii) சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மேலதிக பதவியணியினருக்கான முறையான அங்கிகாரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு 2014 ஒக்தோபர் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.